'முதலாளிகள் அரசியலுக்கு' சரத்போஸ் கட்சி

Phone No. 4502 Regd. No. M. 5458
விலை அணு ஒன்று] [இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மணி 1] சென்னை (9—12—49) வெளியீடு (10—12—49) [இதழ் 112

சவுக்கு!

'பிரஜா வுரிமையைக் கவர்ந்து பிற்போக்குக் கும்பலுக்குப் பாதுகாப்பளிப்பதா?'

ஜனநாயக ஜோதி பரப்பவந்தோர் அடக்குமுறை ஈட்டி வீசும் அநீதி!

'போர் வெறியர்களை முறியடிக்கும் முன்னணி வகுக்க வாரீர்!'

அரசியலமைப்பு சபை தயாரித்துள்ள புதிய அரசியல், நாட்டிலுள்ள முதலாளிகள், நிலச்சுவான்தார்கள். இன்னும் ஏனைய பிற்போக்குக் கும்பல்கள் ஆகியோரின் நலன்களுக்குப் பாதுகாப்பும், ஆக்கமும், ஊக்கமும் அளிப்பதாக உள்ளது. அன்றியும், அது பொதுமக்களின் அடிப்படை உரிமைகள், சுதந்தரங்கள் நலன்கள் இன்னபிறவற்றைப் பறிப்பதாகவும் இருக்கிறது.

தங்களுக்கான அடிப்படை பிரஜாவுரிமைகளைப் பொதுமக்கள் வலியுறுத்தவேண்டும்; ஜனநாயகத்துக்கு மாறான சட்டங்களைக் கண்டிப்பதற்காக நாடெங்கும் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்துதல் வேண்டும்.

ஐக்கிய சோஷலிஸ்டு கட்சியின பொது கவுன்சில் கூட்டம், கல்கத்தாவில்கூடி மூன்று நாட்கள் நடைபெற்றது. கூட்டத்துக்குத் தோழர் சரத் சந்திரபோஸ் தலைமை தாங்கினர். கூட்டத்தின் மூன்றாவது நாளாகிய டிசம்பர் 6-ந்தேதியன்று நிறைவேற்றப்பட்ட முடிவுகளையே மேலே தந்துள்ளோம்.

விசாரணையின்றி காவலில் வைப்பது, பத்திரிகைச் சட்டங்களின் பல்வேறு விதிகளை அமுல் நடத்துவது, கூட்டங்கள் - ஊர்வலங்களுக்குத் தடை விதிப்பது, பத்திரிகை சுதந்தரம்-பேச்சு சுதந்தரம் முதலியவற்றை வழங்க மறுப்பது இன்னபிற மாகாண மத்திய சர்க்கார்களின் அடக்குமுறை நடவடிக்கைகளை, ஐக்கிய சோஷலிஸ்டுகட்சியின் மேற்படி கவுன்சில் அழுத்தமாய கண்டித்தது.

அரசியலமைப்புசபை வகுத்திருக்கும் புதிய அரசியல் எல்லா வகையிலும் ஏகாதிபத்தியக் கொள்கைகளையே கொண்டுநிற்பதால், (நேதாஜி) சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாளாகிய ஜனவரி 23-ந் தேதியைக் 'காமன் வெல்த் எதிர்ப்பு நாளாக' மக்கள் நாடெங்கும் கொண்டாட வேண்டுமென கவுன்சில் கேட்டுக் கொண்டது.

போர்வெறியர்களின் போக்கைக் கண்டித்து, நிலையான சமாதானத்துக்கு உழைக்கும் போராடிவரும் 'சமதானம் நடுவோருக்கு' ஆதரவாக ஐக்கிய சோஷலிஸ்ட் கட்சி இருந்து வருமென்றும், சர்க்கானப் போக்கை அடித்திட்டங்களை முன்னதாகவே அறிந்து முறியடிக்க, இந்நாட்டவ பலமிக்க ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணியொன்றை நிறுவ வேண்டுமென்றும் கவுன்சில் கேட்டுக் கொண்டது.

இந்திய 'சுயராஜ்ய' சர்க்கார் ஏகாதிபத்திய வல்லரசுகளின் கைப்பிள்ளையாக காமன் வெல்த்தில் இணைந்ததையும், ஆண்டாண்டு காலமாக அந்நியர் ஆதிக்கத்தின் கீழ் அடிமைப் படுகுழியில் ஆழ்ந்து கிடந்த மக்களுக்கு அரசியல் வகுக்கிறோமென்று கூறி 'பாஸிஸ வித்துக்கள்' நிறைந்த அடக்குமுறை சாசனமொன்றைத் தயாரித்ததையும், ஆட்சியும் பதவியும் நிரந்தரமாய் நீடிக்க வேண்டுமென்ற கனவில், அநியாய அடக்குமுறைச் சட்டங்களை, அள்ளி அள்ளி வீசிய கொடுமைகளையும் ஆட்சேபிக்காத அருவருக்காத, கண்டிக்காத முற்போக்கு ஸ்தாபனம் இந்நாட்டில் இல்லவேயில்லையென்டதை, நாட்டு நடப்பை அறிந்தோர் நன்குணர்வர். ஆளவந்தாரின் அடக்குமுறை மனோபாவம் இந்நாட்டில் எத்தனையெத்தனை முற்போக்கு அமைப்புகளைத்தெழ காரணமாயிருந்திருக்கிற தென்பதையும் மக்கள் அறியாமலில்லை. ஜனநாயக ஜோதியை நாட்டவரிடையே ஏற்றிப்பரப்பவந்த 'தேசபக்த' தலைவர்கள் அடக்குமுறை-பாஸிஸ ஈட்டிகளை எண்ணிறைந்து எடுத்து வீசுவது கண்டு ஏக்கமும் ஏமாற்றமும், கலக்கமும் துக்கமுமற்ற மக்கள் பலகோடியினர் இன்று பல்வேறு முற்போக்கு அமைப்புகளின் கீழ்திரண்டு நிற்பதென்றே சாலும்தேசிய ஸ்தாபனம் எத்துணை கேவலமான அளவுக்கு வீழ்ச்சியை நோக்கி விரைந்து விட்டதென்பதற்கு!

விலை யேற்றத்தைக் குறைக்கத் திட்டம்

இன்றியமையாப் பொருள்களின் விலைகளை விலைவாசிகள் ஏழைகளுக்குக் குறைப்பதற்கு ஆகிய சர்க்கார் இடமிட்ட திட்டமொன்றை, நிதி மந்திரி டாக்டர் ஜான் மத்தாய் மத்திய சட்டசபையில் எடுத்துரைத்தார்.

பாகிஸ்தானுக்குள் மோமினிஸ்தான் பிரிவினைக் கிளர்ச்சி!

'பெருவாரி மக்களுக்கு ஜனநாயக முறைப்படி தனி சர்க்கார் அவசியம்'

கல்கத்தாவில் மோமின்கள் கூடுவர்

பாகிஸ்தானில் மோமினிஸ்தான் என்ற பெயரில், தனி நாடொன்றை நிறுவுவதற்கான முயற்சி நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது. இந்தியா முழுவதிலுள்ள மோமின்களின் மாநாடொன்று, அடுத்தமாத மத்தியில் கல்கத்தாவில் நடைபெறுமென்றும், நாட்டின் பல்வேறு பகுதிகளினின்றும் மாநாட்டுக்குவரும் மோமின் தலைவர்கள், பாகிஸ்தானில் மோமினிஸ்தான் நிறுவும் திட்டம்பற்றி விவாதிப்பரென்றும் கூறப்படுகிறது.

பாகிஸ்தானில் மோமின்கள் பெருவாரியினராகவுள்ளனர்; எனவே, ஜனநாயக முறைப்படி, மோமின்களின் ஆதிக்கத்துக்குட்பட்டதான சர்க்காரொன்று அமைய வேண்டியது அவசியமென்றும் பாரத்மோமின் பஞ்சாயத் பொதுச்செயலாளர் தோழர் அன்ஸாரி, மாணவர் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஹாங்காங் கரன்ஸிக்கு கம்யூனிஸ்டு தடை

ஹாங்காங், டிச. 8—

குவாங்டன் மாகாணத்தில் ஹாங்காங் கரன்ஸி புழக்கத்திலிருக்கக்கூடாதென்று காண்டனிலுள்ள கம்யூனிஸ்டு அதிகாரிகள் உத்தரவிட்டிருக்கின்றனர். அயல்நாட்டு கரன்ஸிகளை வெளியேற்றுவதும் தடை செய்யப்பட்டிருக்கிறது.

"லட்சியம் நிறைவேறக் காணோம்"

ஐ. நா. உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்து பல்கேரியா வெளியேற்றம்

ஜினிவா, டிச. 8—

ஐ. நா. உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்து பல்கேரியா ராஜினாமா செய்துவிட்டது. பல்கேரியாவுக்கு முன், மூன்று கம்யூனிஸ்டு நாடுகள் ஏற்கெனவே ராஜினாமா செய்திருக்கின்றன. அவை ருஷ்யா, வைலோரஷ்யா, உக்ரைன். இவை இந்த ஸ்தாபனத்தின் அபரிமிதமான செலவைக் கண்டித்து விலகின.

அந்த ஸ்தாபனத்தின் லட்சியப்படி எதுவும் நடைபெறவில்லை என்று குறைகூறி, பல்கேரியா விலகிக் கொண்டிருக்கிறது.

கொழும்பு காமன்வெல்த் மாநாட்டில் இடம் பெறும் பிரச்னைகள்

இலங்கை சர்க்கார் அதிகாரி தரும் தகவல்

கொழும்பு, டிச. 8—

காமன்வெல்த்தைப் பாதிக்கக் கூடியஉலகமுக்கியத்துவம்கொண்ட பிரச்னைகள் மட்டுமே கொழும்பு காமன்வெல்த் மாநாட்டின் முன் விவாதத்திற்கு வரும் என்று, இலங்கை சர்க்கார் அயல்நாட்டில் அதிகாரி ஒருவர் இன்று கூறினர்.

தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை, காஷ்மீர் விஷயம் இவை விவாதிக்கப்படுமா என்று கேட்டதற்கு, இப்பிரச்னைகள் காமன்வெல்த் முழுவதும் பாதிக்கக்கூடிய பிரச்னைகளல்லவென்றும் ஆகவே அவை அஜெண்டாவில் இடம் பெருதென்றும் கூறினர்.

இலங்கை இந்தியர் பிரச்னைபற்றி பேசப்படுமா என்று கேட்டதற்கு, இலங்கையைப் பற்றிய வரையில் இது தீர்ந்துபோன விஷயம் என்றும், பிரஜா உரிமை சட்டம் அமுல் செய்ய ஆரம்பிக்கப்பட்டுவிட்டதென்றும், இலங்கையில் வசிக்கும் இந்தியர்கள் அதன்படி பதிவு செய்யப்பட்டிருக்கிருர்கள் என்றும் கூறினர்.

ஸ்டர்லிங் கடன் விஷயம் அநேகமாக விவாதத்திற்கு வரலாம் என்று தெரிகிறது. பிரிட்டிஷ் தூதுகோஷ்டியில் பிரிட்டிஷ் நிதி இலாகா பிரதிநிதிகள் இடம் பெறுவதால், ஸ்டர்லிங் பற்றிய விஷயம் பேசப்படலாம் என்றே நினைக்க இடம் தருகிறது.

இந்தியப் பிரதம மந்திரி பண்டித நேரு தன் மகள் இந்திராவுடனும் மற்றும் 5 பேர்களுடனும் ஜனவரியில் இங்கு வருகிருர். அவர் கவர்னர் ஜெனரல் லார்ட் ஸோல்பரி விருந்தினராக தங்கியிருப்பார் என்று தெரிகிறது.

'ஆண்களுக்கிருந்த ஆதிக்கத்தை அடக்க துணை செய்யும் திருமண ரத்துமுறை'

செக். பெண்களுக்கு சரிசம அந்தஸ்து

பிரேக், டிச. 8—

பெண்களுக்கு ஆண்களுடன் சம உரிமை, எங்கு சமூக நலனுக்காகமணம் நடந்ததோ, அது நக்காவிடில் திருமண ரத்துக்கு அனுமதி இவைகளுக்கு வசதிசெய்யும் மசோதா ஒன்று 'செக்' பார்லிமெண்டில் சட்டமாக நிறைவேறியது.

திருமண ரத்து பெற்ற ஒரு பெண், உறுப்பினர் பார்லிமெண்டில் பேசுகையில், திருமண விஷயத்தில் ஆண்களுக்கிருந்த ஆதிக்கம் இதனால் அடக்கப்படும் என்றும், ஆண் பெண்களுக்கிடையே, சரிசம அந்தஸ்து ஏற்பட இச்சட்டம் வழி செய்யும் என்றும் கூறினர்.

மாலை மணி

சென்னை 9—12—49 வெள்ளிக்கிழமை

அந்தப் படப்பிடிப்பு

காங்கிரஸ் காரர்கள் பர்மிட்களும், லைசன்சுகளும் வாங்கி தங்களுடைய கடந்தகால சேவைகளையும், தியாகங்களையும் இப்பொழுது பணமாக மாற்ற முயற்சி செய்கின்றனர்.

* * *

காங்கிரஸ்காரர்கள் காங்கிரஸ் இயக்கத்தைத் தங்களுடைய சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ளப் பார்ப்பது சகஜமாகி விட்டது.

* * *

பெரிய பதவிகளை வகிக்கும் காங்கிரஸ்காரர்களில் கூடச் சிலர் தியாக உணர்ச்சி காட்டுவதில்லை.

* * *

காங்கிரஸ்காரர்கள் தங்கள் தியாகங்களையெல்லாம் பணமாக்கிக்கொண்டே போனால், காங்கிரஸ் இயக்கம் அழிந்துவிடும்.

● ● ●

அடுத்த தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெறலாம்!

● ● ●

ஆனால் 1956-ல் என்ன நேரும்?

● * *

காங்கிரஸ்காரர்கள் தங்கள் நோக்கை மாற்றிக்கொண்டு, பேராசையைக் கைவிட வேண்டும்.

● ● ●

நாடாள வந்திருக்கும் காங்கிரஸ்காரர்கள் — அவர்களைச் சார்ந்தோர் ஆகிய இவர்களைப் பற்றிய அரிய படப்பிடிப்பு! அரிய படப்பிடிப்பு மட்டுமல்ல, ஆச்சரியப் படப்பிடிப்பு!

இதைத் தருபவர் யார்?—

யாரேனும் 'பரம்பரை விரோதிகளா?

அல்ல, அல்ல! இது பகைவர்களின் படப்பிடிப்பு என்றால், அதில் அருமையோ, ஆச்சரியமோ இருப்பதற்குத்தான வழியில்லையே!

பின்னை யார்தான் இந்தப் படப்பிடிப்பைத் தருபவர்?

வேறு யாருமில்லை, காங்கிரஸ் தலைவர் 'ராஷ்டிரபதி' பட்டாபி சீதாராமையா தான், இந்த அழகிய-அரிய-அதிசயப் படப்பிடிப்பைத் தருபவர்.

பட்டம் - பதவி - ஆதிக்கம் - அதிகாரம் ஆகிய இந்தப் பீடங்களில் அமர்ந்திருக்கும் பெரும்பாலான காங்கிரஸ்காரர்களின் உள்ளெண்ணம்-போக்கு இன்னபிறவற்றைப் பற்றி, நாட்டு மக்களுக்கு மற்றவர்கள் எடுத்துச் சொல்லும்போதெல்லாம், "பாரத புத்திரர்"களுக்குச் சினம் பிறப்பதுண்டு. ஆகவேதான், அவர்களுடைய தலைவர் பட்டாபியார், அவர்களைப் பிடித்துக் காட்டியிருக்கும் படப்பிடிப்பை அவர்களுக்கே இங்கு காணிக்கையாகக் காட்ட விரும்புகிறோம்.

பகல்பூர் காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் 5-12-49-ல், பேசும்போதுதான், காங்கிரஸ் தலைவர் பட்டாபி சீத்தாராமையா மேற்கூறியவாறு 'திருவாய் மொழிகளை' மலர்ந்தருளியுள்ளார்.

காங்கிரஸ்காரர்களின் போக்கைக் கண்ட தலைவர் பட்டாபி, தியாகம் பணமாக மாற்றப்படுவது கண்டு திகைக்கிறார்-சுயநலத்திற்காகப் பயன்படுத்துவது சகஜமாகிவிட்டது பார்த்துத் தேம்புகிறார்-பெரிய பதவியிலிருப்பவர்கள்கூட தியாக உணர்ச்சி காட்டாதது அறிந்து தளர்கிறார்-காங்கிரஸ் அழிந்துவிடும் என்று எதிர்கால நிலை உணர்கிறார்-அடுத்தத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெறக்கூடும் என்று தெளிவு அடைகிறார். 1956-ல் என்ன ஆகுமோ என்று கலங்குகிறார் பேராசையைக் கைவிடவேண்டும் என்று அறிவுரை கூறுகிறார்! திகைத்தல்-தேம்புதல்-தளர்தல்-உணர்தல் - தெளிவடைதல்-கலங்குதல்- அறிவுறுத்தல் ஆகிய இந்த உணர்ச்சிகள் அனைத்தையும் வரவழைத்துக் கொள்கிறார் பட்டாபி சீத்தாராமையா, காங்கிரஸ்காரர்களின் போக்கினை நினைந்து கொள்ளும்போதெல்லாம்.

"நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மாந்தரை நினைக்கும் போதெல்லாம்" என்று பாரதியார் கூறுவது போன்று, நாட்டு மக்கள் "நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட ஆளவந்தார்களைக் காணும்போதெல்லாம்" என்று கூறிடும் அளவுக்குக் காங்கிரஸ்காரர்கள், நாட்டில் தங்கள் ஆதிக்க பலத்தை நிலைநாட்டி வருகின்றனர். காங்கிரஸ் தலைவரே வெளிப்படையாகச் சுட்டிக்காட்டும் அளவுக்கு, அவர்களுடைய பிறபோக்குத் தன்மை அமைந்திருக்கிறதென்றால், பொது மக்கள் எத்தனை காலத்திற்குப் பொறுத்துக்கொண்டிருப்பார்கள் என்று எண்ணமுடியும்?

நாட்டில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைமைகளுக்கும், குழப்பங்களுக்கும், வறுமை—பசி-பட்டினி ஆகிய இவை தலைவிரித்தாடுவதற்கும் முக்கிய காரணம், ஆளவந்தார்களின் திறமையின்மையும், தியாகத்தைப் பணமாக மாற்றிக் கொள்வதற்கு அவர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சியும் ஆகும் என்பதைத் தெளிவாக மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். இதைக் காங்கிரஸ் தலைவரே ஒளிவுமறைவில்லாமல் உணர்ந்திருப்பது கண்டு மகிழ்கிறோம்.

"காங்கிரஸ்காரர்கள் பேராசையைக் கைவிடவேண்டும்" என்று தோழர் பட்டாபி அறிவுரை கூறியிருப்பது மிக மிக வேண்டற்பாலதும், அவசியமானதுமாகும். அந்தப்பேராசைப் பண்புதான், என்ன செய்தாயினும் பட்டம்-பதவிகளை விடாப்பிடியாகப் பிடித்துக்கொள்ளும் படியாகத் தூண்டுகிறது. அந்தப் பேராசைப் பண்புதான் எதிர்கட்சிக்காரர்களை அலட்சியமாகப் பார்க்கச் சொல்கிறது-எதிர்க்கட்சிகள் மீது அடக்குமுறையைப் பிரயோகிக்கச் செய்கிறது. இன்றுள்ள நிலையில், நாடு நன்னிலை பெறவேண்டுமானால், நிச்சயமாக "காங்கிரஸ்காரர்களின் பேராசைப்" பண்பு தொலைய வேண்டும்! அந்தப் பண்பு தொலைந்தால் நாடு நலமுறும்; மக்களும் நலமுறுவர்; அவர்களும் கூட நலம் பெறுவர்!

தோழர் பட்டாபி சீத்தாராமையாவின் அந்தப் படப்பிடிப்பு காங்கிரஸ் தோழர்கள் தம்மை நிலையுணர்ந்து திருந்துகின்ற அளவுக்குப் பயன்பட்டால் நல்லது! பயன்படுமா?

யோசனையற்ற சிக்கனம்

சர்க்கார் கூடியவரை தங்கள் செலவைச் சுருக்கியாகவேண்டிய சமயம் இது. ஏனெனில், தற்போதைய ரீதியில் செலவானால் நடைமுதல் வருஷ இறுதியில் வரவை விட செலவு நாற்பது கோடி ரூபாய் மிஞ்சிவிடும். இந்தத் துண்டைத் தவிர்க்க சர்க்கார் பல துறைகளிலும் செலவு திட்டங்களை ஒடுக்கிவிடுகின்றனர். இதில் அவர்கள் காட்டும் கண்டிப்பும், உறுதியும் போற்றத் தக்கவைதான். என்னும் இத்தகைய நிலைமையிலும் தள்ளிவைக்கவோ சுருக்கவோ முடியாத அத்தியாவசியமான செலவினங்கள் சில உண்டு. உதாரணமாக கல்வி பற்றிய சில இனங்களில் சிக்கனக் கோடரியைப் பிரயோகிப்பது யோசனைக் குறைவையே குறிக்கும். தேசத்தின், சமுதாயத்தின் நல்வாழ்வுக்கு அஸ்திவாரம்போல் அமைந்த இனங்கள் இவை. ஒருபுறம் இவற்றைப் பறித்துக்கொண்டே மறுபுறம் அந்த நல்வாழ்வுக்கு வகை செய்துகொண்டிருப்பதாகப் பேசுவது அர்த்தமற்றதாகும். இந்த சந்தர்ப்பத்தில் நாம் பிரஸ்தாபிக்கும் கல்வி எல்லாவகை அறிவையுமே குறிப்பிடுவதன்று. அவ்வறிவுவகைகளில் நமக்கு அத்யாவசியமாயுள்ள, உடனடியாகப் பயன்படக்கூடிய சில வகைகளை மட்டுமே இங்கு குறிப்பிடுகின்றோம்.

—சுதேசமித்திரன், டிச. 7—

கைத்தறித் தொழிலுக்கு நிபந்தனையோடு ஆதரவு

இந்திய சர்க்கார் போக்கு

தங்களுக்குத் தேவைப்படும் துணிவகைகளுள் குறைந்தபட்சம் மூன்றிலொரு பகுதியைக் கைத்தறித் துணியாக வாங்கிக்கொள்ள சர்க்கார் முடிவு செய்துள்ளதாகத் தொழில் மந்திரி டாக்டர் முகர்ஜி டிசம்பர் 6-ந்தேதி பகர்ந்தார். இப்படி கைத்தறித் துணியாக வாங்குகிறதும் ஆளின் தொகை ரூ. 1 கோடி யென்று தெரிகிறது. கைத்தறித் துணியின் தரம் தங்கள் தேவைக்கு ஏற்றதாக இருக்கும் பட்சத்தில் மட்டுமே அது வாங்கப்படும் என்பதும் ஒரு நிபந்தனை [illegible] மந்திரி முகர்ஜி.

சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம்

மாவட்ட மாநாட்டின் வரவேற்புக் கமிட்டிக் கூட்டம்

மாநாட்டின் தலைவர்—துவக்கிவைப்பவர், நிதி வசூல் மற்ற ஏற்பாடுகள் ஆகியவைகளை ஆலோசிக்க, 10-12-49 சனி மாலை 5-மணிக்கு, சர்யாய் வேற்படி கமிட்டிக் கூட்டம், "மாலை மணி" அலுவலகத்தில் நடைபெறும். உறுப்பினர் அனைவரும் தவறாது வர வேண்டுகிறோம்.

கே. கோவிந்தசாமி,
ஏ. எஸ். ராமன்,
செயலாளர்கள்.

அரபுநாடுகள் பாதுகாப்புத் திட்டம்

டமாஸ்கஸ், டிச. 8—
அரபுநாடுகளுக்கான கூட்டுப் பாதுகாப்புத் திட்டம் பற்றிய விவரங்கள், மிகவும் இரகசியமாகவே இருக்கின்றன. ஸிரியா பிரதிநிதிகள் இன்னும் பரிசீலனை செய்து வருவதாகவே தெரிகிறது. அரபு நாடுகளின் ராணுவங்களை ஐக்கியப்படுத்துவது சம்பந்தமான பேச்சுவார்த்தைகள், டிசம்பர் 10-ந்தேதிக்கு மேல் ஆரம்பமாகலாம் என்று தெரிகிறது.

அறிவுக் கதிர்!

மன்னன் கையில் செங்கோல் இருக்கிறது; அவன் கையசைத்தால் போர்வீரர் என்னைப் பழிவாங்க வருவார்கள் மதகுருவின் கையில் சிலுவை இருக்கிறது; அவன் முன் மண்டியிட்டுக் கிடக்கும் மக்களை என்மீது ஏவுவான். எனினும், நான் இருவரையும் எதிர்க்கிறேன். அதைவிடப் பலமான பேனா இதோ என் கையில் இருக்கிறது.

—வால்டையர்.

செயலில்இறங்கவில்லை!

லண்டன், டிச. 8—
ரஷ்ய ஆக்கிரமிப்பிலுள்ள ஜெர்மனியின் மக்களைக் குடியேற்ற [illegible] திட்டங்களை ஏற்படுத்த அனுமதி தரப்போவதாக ரஷ்யா சொன்னதே ஒழிய, அந்த காரியத்தில் இன்னும் ஈடுபடவில்லை. பிரிட்டனுக்கு [illegible] தகவல்கள் கூறுகின்றன.

பிரஞ்சிந்திய பொது வாக்கெடுப்பு

தென்னிந்தியாவிலுள்ள பிரெஞ்சுப் பகுதிகளுக்கான பொது வாக்கெடுப்பை அடுத்த பெப்ருவரியில் நடத்த முடிவு செய்திருப்பதாக பிரஞ்சு சர்க்கார் இந்திய சர்க்காருக்கு அறிவித்துள்ளனராம். தேதிமட்டும் இன்னும் குறிப்பிடப்பெறவில்லையாம்.

இந்தி ஆதிக்கம் வலுப்பெறும்

பிரசார வேலையை அரசியலாரே மேற்கொள்ளப்போகிறார்களாம்!

இன்னும் 15 வருஷங்களுக்குள் இந்தி அரசியல்மொழியாவதை சாத்தியமாக்கும் பொருட்டு, நாட்டில் இந்தியைப் பரப்புவதற்கு சர்க்காரே ஒரு ஏற்பாட்டை நிறுவலாமெனத் தெரிகிறது. இந்தியைப் பரப்பும் வேலையைத் தற்சமயம் அகில இந்திய இந்தி-பரீஷத்தும், அகில இந்திய சாகித்ய சம்மேளனமும் செய்து வருகிறது. அவற்றின் வேலையை சர்க்காரின் விளம்பர இலாகா ஆலோசனை செய்து வருவதாகத் தெரிகிறது. அடுத்த பார்லிமெண்ட் கூட்டத்தில் இது சம்பந்தமாகத் தீர்மானம் கொண்டு வரப்படலாம்.

இது புது டில்லியிலிருந்து வெளியாகியுள்ள செய்தி. இந்தி பரீஷத்தும் அகில இந்திய சாகித்ய சம்மேளனமும் செய்து வரும் பணியை, சர்க்காரே மேற்கொள்ளப் போகிறதாம். அதாவது, இது காறும் உரிமையற்று நாட்டிலே நடமாடிய இந்தி மொழி, இனிமேல் அரசாங்க முத்திரையுடன், உரிமையோடு உலவப் போகிறது என்பதே இதன்பொருள். அரசியலாருக்கு இந்திப் பிரசாரத்தில் அவ்வளவு அக்கறை! திராவிட நாட்டில் மட்டுமின்றி, இந்தியாவின் வேறு பல பகுதிகளிலும் இந்திக்கு எதிர்ப்பு இருக்கிறது என்பது, நாடறிந்த செய்தி. இப்படிப்பட்ட நிலையிலேதான், சர்க்கார் விளம்பர இலாகாவே இந்தியைப் பரப்பும் பணியை மேற்கொள்ளத் திட்டமிடப்படுகிறது. இதனைச் சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் இந்தியை இந்தியாவிலும் கட்டாயமாகப் புகுத்த வொரு வழியென்றே சொல்லவேண்டும்.

இந்திமொழி தேசியமொழியாக்கப்படவேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளும் பண்டிதநேருகூட, அதில் கட்டாயம் கூடாது என்று, பலதடவை சொல்லியிருக்கிறார். கட்டாயம் கூடாது என்றால், அதற்கான மக்களின் வரிப்பணம் செலவிடப்படுவது கூட தடை செய்யப்படவேண்டும். அப்படியின்றி, சர்க்கார் செலவில் இந்திமொழி பரப்பும் பணி நடைபெறுமானால், அம்முறை கட்டாயத்தின்பாற்பட்டதேயாகும்.

இப்பொழுது, இந்திய சர்க்கார் போட்டிருக்கும் திட்டப்படி இந்திய விளம்பர இலாகா இப்பணியை மேற்கொள்ளுமானால், சென்னை மாகாணமும் அதனைப் பின்பற்றியே தீரவேண்டும். அப்படிப்பட்ட நிலை வந்தால், அது இம்மாகாணத்தைப் பொறுத்தவரையில் கட்டாய முறையா அல்லவா என்று கேட்கிறோம். மேலும் தமிழ் நாட்டார் இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படுவதை எதிர்த்து வருகின்றனர். அத்தகையவர்களின் தமிழகத்துடைய வரிப்பணம் இந்திக்காகச் செலவிடப்படுவது கட்டாய முறையேயன்றி வேறில்லை.

விவசாயிகளின் வேதனை யறியாத சர்க்கார்

:0:

வருவாய்க்கு வழிதேடும் வகை தெரியவில்லை

:0:

சென்னை சர்க்காருக்கு ஓமந்தூரார் சர்டிபிகேட்!

10-ரூபாயிக்கு அதிகமாக நிலவரி செலுத்தும் ரயத்துகளை ஒருவருஷ நிலவரியைக் கட்டாய கடனாகக் கொடுக்குமாறு சென்னை சர்க்கார்கட்டாயப்படுத்த நினைப்பது, மிகவும் துர்பாக்கிய வசமானது. ரயத்துக்களைப் பாதிக்கும் எக்காரியங்களையும் எவ்வித ஆட்சேபமும் இன்றி நடத்தலாமென்று சர்க்கார் கருதுகிறது என்பதை நிரூபிக்க, இதுவொரு உதாரணம். இதுபோன்ற திட்டம்போட இதுசரியான சமயமல்ல. பணம் பெறுவதற்கு சரியான இடமுமல்ல. ரயத்துகளின் நிலைமை இன்னதென்று தெரியவில்லை என்பதையே இது காட்டுகிறது. ரயத்துகள் சுபிட்சமாக இருப்பதாக நினைப்பது தவறு. வரிவசூல் செய்வதற்கு மற்ற சகலவிதமானவழிகளையும்ஆராய்ந்து பார்த்துவிட்டுத்தான, இந்த வழியைப் பின்பற்றியிருக்க வேண்டும். வேறு வழியே இல்லையென்றால் ரெவன்யூ ரிசர்விலிருந்து பணம் எடுத்துக்கொள்ளலாம்"

இது முன்னாள் சென்னை முதலமைச்சர் தோழர் ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் அண்மையில் வெளியிட்டிருக்கும் அறிக்கை யொன்றில் காணப்படும் கருத்துக்கள். ஓமந்தூராரின் இவ்வறிக்கை தமிழ்நாட்டு விவசாயிகளின் நிலைமையையும், சென்னை அரசினரின் பதேச் சாதிகார போக்கையும் நன்கு சித்தரிக்கக் காட்டுவதாய் அமைந்துள்ளது அதுமட்டுமல்ல, கூர்ந்துநோக்கினால், இந்த அரசியலாருக்கு ஆளும் திறமை போதிய அளவு இல்லை என்பதை விளக்கும் தன்மையதாகவும் இருக்கிறது.

மத்திய ஆட்சியால் இம்மாகாண ஆட்சி முறையில் எத்தனை இன்னல்கள் விளைகின்றன என்பதற்கும், இவ்வறிக்கை ஏற்றதொரு உதாரணமாக அமைந்துள்ளது. இம்மாகாண வருவாயில் பெரும் பகுதியை விழுங்கி ஏப்பமிடும் மத்திய அரசாங்கம், தேவைப்பட்ட போது உடன் கொடுத்துதவ முன் வருவதில்லை எதற்கெடுத்தாலும் பணமில்லை யென்று கையை விரித்து விடுகிறது. அண்மையில் இம் மாகாண அரசாங்கம் கேட்டிருந்த 6 கோடி ரூபாய் கடனைத்தர மறுத்து விட்டதை வாசகர்கள் அறிந்திருப்பர். அத்தொன்றே மத்திய ஆட்சியினரின் மனப்பான்மையை விளக்கப் போதிய சான்றாகும்.

இங்ஙனம் கைகொடுக்க வேண்டிய ஆட்சியாளர், கைவிரித்து பெருபட்டணி உதவ தவறு செய்யப்போதிலும், இம்மாகாண மக்களைச் சாகடிக்க இடம் கொடுத்து வருகிறது,

நமது கையைக்கொண்டே நமது கண்களைக் குத்துவதிலக்கை தேர்ந்த மத்திய அரசாங்கம்.

ஒரு வருஷ நிலவரியைக் கட்டாயக்கடனாகவசூலிப்பதென்று சென்னை அரசோரால் ஒரு திட்டம் வகுத்திருந்து அதனை நிறைவேற்ற மத்திய அரசாங்கத்திடம் அநுமதி கோரியிருந்தனர். அதற்கு "ஆகா அப்படியே செய்க!" என்று மத்திய ஆட்சியாளர் அருள் புரிந்துவிட்டனர்! இதை கண்டு சென்னை அரசாங்கமும் உளம் பூரித்து விவசாயிகள் தலையில் கையை வைக்க திட்டமிட்டுவிட்டனர்! அத்திட்டம் பற்றித்தான் ஓமந்தூரார் தனது கருத்தை வெளியிட்டுள்ளார். இதில்-உள்ளக் குறுறலை வெளியிட்டுள்ளார்.

"ரயத்துகளைப் பாதிக்கும் எக்காரியத்தையும் எவ்விதத்தடையுமின்றி செய்யலாமென்பது இந்த சர்க்கார் நினைப்பு"

"ரயத்துக்களின் நிலைமை இன்னதென்று தெரியாத சர்க்கார்" வரி வசூல் செய்யும் வழிவகை யாவை என்பதை அறிந்துகொள்ளும் ஆற்றல் அற்ற சர்க்கார்"

இதுவதாம் இம்மாகாண ஆட்சியாளருக்கு ஓமந்தூரார் தரும்சர்ட்டிபிகேட்! ஓமந்தூரார் சொல்லுவதில் அர்த்தமில்லை என்று யாரும் அலட்சியமாகக் கருதிவிட முடியாது. அவர் ஒரு சிறந்த விவசாயி, நாட்டுப் பொருளாதார நிலை அறிந்தவர், அரசியல் அநுபவம் மிக்கவர், ஆட்சிப் பீடத்திலிருந்து ஆட்சி முறையிலும் அநுபவம் பெற்றவர். அப்படிப்பட்டவரே சொல்லுகிறார், இது பொருந்தாத் திட்டம், உடனே இதனைக் கைவிட வேண்டும் என்று.

எனவே, அரசியலார், விவசாயிகளை மேலும் மேலும் கசக்கிப் பிழியாமல் இருப்பதேநலம். ஏற்கனவே விவசாயிகள் தரும் வரி அதிகம். இந்நிலையில் அவர்களை மேலும் நெருக்கிக் கடன் கொடுங்கள் என்று கேட்பது சரியல்ல, முறையல்ல, நாட்டு நிலையுணர்ந்த சர்க்கார் செய்யும் காரியமுமாகாது.

வருவாய்க்கு வேறு வழியில்லை; அதனால் இத் திட்டத்தைத் தீட்டினோம் என்பது பொருந்தாக் கூற்றே.

வரி போடுவது. அல்லது கடன் கேட்பது ஆகிய இவைதான் வருவாய்க்கு வழிதேடும் முறை என்று கருதுவது தவறு. ஒரு சுதந்திர ஆட்சியாளர் மேற்கொள்ளக் கூடிய பணியுமன்று.

வேறு என்னதான் செய்வதெனில், கூடுமான வரையில் தொழில்களைத் தேசியமயமாக்குவதன்மூலம், பொருள் திரட்டுவதே ஒரு சிறந்த வழி நாட்டின் பொருளாதார சீர்கேட்டைச் செப்பனிடும் முறை அறிவோ "இந்த வழிகளையும் ஆராய்ந்து பார்த்துவிட்டுத்தான் இவ்வழியை மேற்கொண்டிருக்க வேண்டும்" என்றுபொருளபட கூறுகிறார் ஓமந்தூரார். அவர் நாம் திட்டமாகச் சொல்லுகிறோம், தொழில்களைத் தேசியமயமாக்குங்கள் என்று இதுதான் நமக்கும் அவருக்கும் உள்ள வித்தியாசம்.

அங்ஙனம் தொழில்களைத் தேசியமயமாக்கும் உரிமை தமக்கு இல்லையென்று இம்மாகாண சர்க்கார்தான் சொல்லுவர்களாயின் இவர்களுக்குச் சுதந்திரமில்லை இந்திய சுதந்திர மடைந்தும் இம் மாகாணம் இன்னும் சுதந்தர மடையவில்லை என்பதை ஒப்புக்கொண்டதாகும் இந்நிலைமாற வேண்டுமானால், மத்திய ஆட்சியிலிருந்து இம்மாகாணம் விடுதலை பெற்று தனியரசு ஏற்படுத்துவதைத்தவிர வேறு வழியில்லை. இந்த உண்மையைத்தான் ஓமந்தூரார் அறிக்கை உணர்த்துகிறது.

சென்னை மாகாணத் தொழிலாளருக்கு வேண்டுகோள்

தூத்துக்குடி, டிச. 6—

தூத்துக்குடி உப்புத் தொழிலாளர் சங்கத்தின் தலைவரான; தோழர் கே. வி. கே சாமி கீழ்க்கண்ட அறிக்கையை விடுக்கிறார்:—

சென்னை அரசாங்கத்தார், சென்னை மாகாணத்திலுள்ள பல தொழிற்சங்கங்களை சட்டவிரோதமாக்கி அவைகளிலுள்ள பணங்களையும், தளவாடச் சாமான்களையும் பறிமுதல் செய்துகொண்டார்கள்.

அரசாங்கத்தின் இந்த கெடுபிடிப் போக்கினால், தொழிலாளர்களின் விடுதலை உணர்ச்சியை அடக்கி ஒடுக்கி, சிரந்தர அடிமைகளாக்கக் கங்கணம் கட்டி விட்டார்கள், என்றே யூகிக்க இடமேற்படுகிறது. அரசாங்கத்தின் இச்செய்கையை இவ்விதமே நாம் விட்டுக்கொண்டே போனால், தொழிலாளர் வர்க்கமே என்றென்றும் தலை எடுக்க முடியாதவாறு ஒடுக்கப்பட்டேபோகும்.

எனவே, சிதறிக்கிடக்கும் தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும் ஒன்றுகூடி சட்டவிரோதமாக்கப்பட்டுக்கிடக்கின்ற தொழிற்சங்கங்களை விடுவிக்க, நம் மாகாணத்தைப் பொறுத்தமட்டில் தொழிலாளர் ஸ்தாபனம் ஆரம்பித்து, நல்லதோர் திட்டம் தீட்டி ஆவன செய்யவேண்டும்.

இதற்காக, கூடிய சீக்கிரம் சென்னை மாகாணத் தொழிலாளர் மாநாடு ஒன்று கூட்டி அதன்மூலம் ஆவனசெய்ய எண்ணியுள்ளோம்.

எனவே, சிதறிக்கிடக்கும் தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும் இம் முயற்சிக்குத் தங்கள் தங்கள்கருத்துக்களைத்தெரிவித்தால், பலர் சம்மதம் பெற்றுவிட்டால் நல்லதோர் உருவான வேலையை உடன் செய்யலாம். தோழர்கள் இதில்சிரத்தை எடுத்து, உடன் தகவல் தெரிவிக்கவும். மற்ற விவரம் பின்னால் தெரிவிக்கிறேன்.

சர்வதேச இஸ்லாமிய மாநாடு அடுத்தவாண்டு இரானில் நடைபெறவிருக்கிறது என்று தெரிய வருகிறது.

1951ம் ஆண்டு மாநாட்டை டெஹ்ரானில் நடத்த வேண்டும் என்று ஈரான் அனுமதித்திருக்கிறது. (ரூனேப்)

அரபுகளுக்கு நிலங்களை திருப்பித்தர இஸ்ரேல் மறுப்பு

லேக்ஸக்ஸஸ், டிச. 8—

பாலஸ்தீனத்தை விட்டு சென்றுள்ள அரபுகளுக்கு அவர்கள் விட்டுப்போன நிலங்களைத் திருப்பித்தர, இஸ்ரேல் உத்தேசிக்கவில்லை என்றும் ஆனால் இதற்கான நஷ்ட ஈடு— இஸ்ரேல் தரவிரும்பும் என்றும் இஸ்ரேல் அயல்நாட்டு மந்திரி ஷெரேஷெ டாக் கூறியிருப்பதாக இங்கு தகவல் கிடைத்திருக்கிறது.

அரபியர்களின் சொத்துகள் விஷயமும், சொத்துக்குடையவர்கள் அரபுகளுடன் சேர்ந்துள்ளவர்களா, யூதர்களுடன் சேர்ந்துள்ளவர்களா என்பதைக் கவனித்து, அதற்கேற்றவாறே இஸ்ரேல் முடிவு செய்யுமாம்.

அரபுகளுக்கும் யூதர்களுக்குமிடையே சமரசப்பேச்சு நடைபெறுவதாக வெளியான செய்திகளை ஷெர்டாக் மறுத்திருக்கிறார்.

—ரூனேப்

ஜெருசலம் பற்றி ஐ. நா. அரசியல் கமிட்டி முடிவு

லேக்ஸக்ஸஸ், டிச. 8—

ஜெருசலம் சர்வதேச கட்டுப்பாட்டு நிர்வாகத்திலேயே இருக்க வேண்டும் என்ற தீர்மானத்தை 35 வோட்டுகள் ஆதரவாகவும் 13 வோட்டுகள் எதிர்த்தும் ஐ. நா. அரசியல் கமிட்டி நிறைவேற்றியிருக்கிறது.

இந்தியா உள்பட 11 நாடுகள் வோட்டெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. பிரிட்டன், யுனைட்டெட் ஸ்டேட்ஸ், யூகோஸ்லாவியா, துருக்கி ஸ்வீடன், நார்வே, இஸ்ரேல்சிலி ஆகிய நாடுகள் எதிர்த்து வோட்டுச் செய்தன.

வ. உ. சி. நினைவு நாள்

சென்னை, டிச. 7—

4—12—49 ஞாயிறு காலை 10 மணிக்கு குடிமக்கள் மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில் 'வ. உ. சி. நினைவுநாள்' விழா நடைபெற்றது. அரசினர் கலைக் கல்லூரித் தமிழ் ஆசிரியர் தோழர் க. தங்கவேலன் பி. ஓ. எல். (ஆனர்ஸ்) தலைமையில் தோழர்கள் பால்வண்ணன், தேவனூரன், சண்முகன் முதலியோர், வ. உ. சி.யின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிப் பேசிய பின், கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

(1) சென்னை 'ஜார்ஜ் டவுன்' என்னும் பகுதியின் பெயரை மாற்றி 'சிதம்பரம் நகர்' என்று வைக்கும்படி சென்னை நகராண்மைக் கழகத்தை இம் மன்றம் கோருகிறது.

(2) பூக்கடை போலீஸ் நிலையத்திற்குப் பக்கத்திலுள்ள ஐந்தாம் ஜார்ஜின் உருவச் சிலைக்குப் பதில், மறைந்த மவீரர் சிதம்பரனாரின் உருவச் சிலையை வைக்குமாறு, சென்னை அரசினரை இம் மன்றம் கேட்டுக்கொள்கிறது.

(3) "வ. உ. சிதம்பரம் ஆங்கிலேயனுக்குக் கூறுவது, ஆங்கிலேயன் வ. உ. சிதம்பரத்திற்குக் கூறுவது" என்று காணப்பட வேண்டிய தலைப்புகள், எக்காரணத்தாலோ இதுவரை வெளியான பாரதியாரின்பாடல் தொகுதிகளில் 'தேச பக்தன் ஆங்கிலேயனுக்குக் கூறுவது, ஆங்கிலேயன் தேச பக்தனுக்குக் கூறுவது" என்று அமைக்கப்பட்டிருக்கின்றன பாடலின் பொருள், அறிஞரின் சான்று இரண்டும் தலைப்பில் காணப்படும் "தேச பக்தன்" வ. உ. சிதம்பரமே; என்பதை உறுதிகாகக் கூறும் பாரதி பாடல்களை வெளியிடும் உரிமையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கும் இந்நாளில், தலைப்புகளில் 'வ. உ. சிதம்பரம்' என்ற உண்மைப் பெயருக்கு இடமளிக்கப்படவேண்டும் என்று இம் மன்றம் வேண்டுகிறது.

சர்க்கார் தீவிரம் கண்டு செக். குருமார் கொக்கரிப்பு!

(0)

'தனிக் காட்டு ராஜாக்களாய்' விட்டுவிட வேண்டுமாம்!

லண்டன் டிச. 6—

செக்' சர்ச்கள் (மாதா கோயில்கள் மீது, சர்க்கார் ஆதிக்கம் இருக்கும் சட்டங்களை எடுத்துவிட வேண்டும் என்று கோரி, ரோமன் கத்தோலிக் பிஷப்கள் ஒரு கோரிக்கையை சமர்பித்திருந்தனர். இதை செக் சர்க்கார் நிராகரித்து விட்டதாகத் தெரியவே அவர்கள் தங்கள் கோரிக்கைகளை பிரசுரித்து உலகிற்கு விளம்பரப்படுத்தி யிருக்கின்றனர்

ஆஸ்திரியா சமாதான பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை

நியூயார்க், டிச. 8—

ஆஸ்திரியா சமாதான பேச்சுவார்த்தைகளில் ரஷ்யாவின் புது நிபந்தனை காரணமாக முட்டுக்கட்டை ஏற்பட்டுவிட்டது. ஆஸ்திரியாவுக்கு போர்க்காலத்தில் ரஷ்யா செய்த உதவி, அனுப்பிய சப்ளை விஷயமாக முதலில் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டாகவேண்டும் என்று ரஷ்யா இப்பொழுது கோருகிறது.

இந்த சமாதான ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளில் பிரிட்டன், யுனைட்டெட்ஸ்டேட்ஸ், ரஷ்யா, பிரான்ஸ் ஆகியவை கலந்துகொண்டிருக்கின்றன.

தி. மு. க. மாவட்ட அமைப்புக் குழுவினருக்கு

இதுவரை சென்னை, தென் ஆற்காடு, கோவை, மதுரை ஆகிய நான்கு மாவட்டங்களில் கட்டுமே அமைப்புமுறையுடன் கூடிய தேர்தல்படி கிளைக் கழகங்கள் பிரதிநிதிகளைக்கொண்டு மாவட்டக் கிளைகள் அமைக்கப்பட்டுள்ளன.

எனவே, மற்ற மாவட்டங்களிலும் விரைவில்இப்பணியைச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்,

மாவட்ட மாநாடுகள் நடத்தப்படுவதற்கு முன் குறிப்பிட்டுள்ள அந்தந்த மாவட்டங்கள் மாவட்டக் கிளையை அமைத்துவிட வேண்டுமென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் வி. நடராசன்,
செயலாளர்.
அமைப்புக் குழு, தி. மு. க.

தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

எட்டயபுரம்

எட்டயபுரம், டிச. 6—
4-12-49 மாலை 6-மணிக்கு எட்டயபுரம். நடுவிற்பட்டி, அண்ணாத்துரை வாலிபர் சங்கத்தின் முன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் இருவண்ணக் கொடியை தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் ஏற்றி வைத்தார்கள். பின் 7-30-க்கு முத்தாலையம்மன் கோவில் மைதானத்தில், தி. மு. க. பொதுக்கூட்டம் துவங்கியது. சிறுவன் "ஸ்டாலின்" நாட்டுப் பண்பாடியபின், செயலாளர் மு. வெற்றிவேல், கோவில்பட்டி, செ. அருணாசலம் அவர்களைக் கூட்டத்தினருக்கு அறிமுகம் செய்துவைத்து தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொண்டார். தலைவர் முன்னுரையில், "இன்று இந்த நாட்டில் ஜனநாயகம் கொலை செய்யப்படுகிறது. இதே காங்கிரஸ்காரர்கள் சுதந்திரம் வருவதற்கு முன், என்னென்ன அடக்குமுறைகளை வெள்ளையன் இந்தியர்கள் மேல் ஏவினானோ அதைத்தானே இன்று இவர்கள் செய்கின்றனர்! இதைத் தடுத்து சுதந்திரமாக, அமைதியாக மக்களை வாழச் செய்யத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபடுகிறது. ஆகவே, எங்கள் கழகத்தை ஆதரியுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

து. ரத்தினம்

முதலில் தூத்துக்குடி, து. ரத்தினம் அவர்கள், "இன்று மக்கள் பட்டினியால் வாடும் போது, கார்த்திகை மிகவும் பிரமாண்டமாக கொண்டாடப்படுகிறது" என்றும், திருவண்ணாமலையில் பார்த்தால் பல டின் கணக்கில் நெய் கொட்டப்படுகிறது தீபம் ஏற்ற அங்கு கூடியிருப்பவர்களில், 1000-த்தில் ஒருவராவது நெய் ஊற்றி சாப்பிடுகிறார்களா?" என்றும், கார்த்திகை புராணம் எழுந்த வரலாறு பற்றியும் பேசினார்.

மேக. முத்து

இரண்டாவதாக தோழர் மேக. முத்து அவர்கள் பேசும்போது, சுதந்திர அரசாங்கம் என்று சொல்லி வடநாட்டாரால் சுரண்டப்படும் திராவிட மக்களை விடுவிக்கத்தான், தி. மு. கழகம் பாடுபடுகிறதென்றும், வடநாட்டு அரசினர் அமெரிக்காவிடமிருந்தும், உலகபாங்கியிடம் இருந்தும் வாங்கும் கடனில், ஏன் இந்நாட்டு நெசவாளர்களுக்குக் கடன் கொடுத்து, செத்துக்கொண்டிருக்கும் கைத்தறியாளர்களை காப்பாற்றக்கூடாது? என்றும் ஆகவேதான் இவர்கள் பிடியிலிருந்து விலக வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

கலிங்கன்

பின்னர், எட்டயபுரம் நெசவாளர் சங்கச்செயலாளர், தோழர் கலிங்கன், கடவுள் பேரால் சுரண்டப்படுவதைக் கண்டித்தும், நம் நாட்டில் கோயில்களிலும், மடங்களிலும் குவிந்து கிடக்கும் பொருள்களை நாட்டுக்குப் பயன்படுத்தத் துணிவில்லாமல், அமெரிக்கா போன்ற அயல் நாடுகளுக்குக் கடன் கேட்கச் செல்லுகிறார்கள் ஆட்சியாளர்கள் என்றும். இன்னும் இன்றைய ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளைக் கண்டித்தும், தி. மு. க். கொள்கையை விளக்கியும் பேசினார்.

கே. வி. கே. சாமி

இறுதியாகத் தோழர் கே. வி. கே. சாமி பேசியபோது, இந்த நாட்டில் பார்ப்பனர்களில் ஒருவர்கூட கூலி வேலை செய்வதைக் காண முடியாதென்றும், பாட்டாளிகள் எல்லோரும் திராவிடர்கள் தான் என்றும் குறிப்பிட்டார். மேலும் அவர் பேசுகையில், தோழர் ஜி. டி. நாயுடு தயாரித்த சவர பிளேடு வருஷக் கணக்கில் உழைப்பதாகும். இன்னும் இதைப் போன்ற அரிய தயாரிப்புகளுக்கெல்லாம் தென்னாட்டில் ஆலைகள் துவக்க அரசாங்கம் ஆக்கமளிக்கவில்லை என்றும், பொருளாதாரத்தில் வடநாட்டில் தென்னாடு பாதிக்கப்படுகிறதென்றும், அதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் திராவிட நாட்டுப் பிரிவினையை வலியுறுத்துகிறதென்றும் எனவே தான் நாங்கள் வாழ்க்கையையே இலட்சியம் செய்யாமல் நாட்டு முன்னேற்றத்திற்காகக் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காகப் பாடுபடுகிறோம் என்றும் பேசி முடித்தார்.

பின் தலைவர் முடிவுரைக்குப் பிறகு, செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது. (செ-ர்)

பருகூர்

பருகூர், டிச 7—
சேலம் மாவட்டம் பருகூர் திராவிட முன்னேற்றக்கழக இணைப்பாக மல்லபாடியில், 4—12—49 ஞாயிறு மாலை 6 மணியளவில் தோழர் ஹரிராவ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் எம். கே. சாமி கழக திட்டங்களைப் பற்றிவிளக்கிப் பேசினார். பின்னர் திருப்பத்தூர் தோழர் கே. நெடுஞ்சோழன் கழகத்தைத் துவக்கி வைத்து திராவிடர்களுடைய இழிந்த நிலை நீங்கி, வாழ்க்கையில் மேம்பாடடைய முன்னேற்றக் கழகம் நாட்டில் பணிபுரிந்து வருகிறது என்றும், வடநாட்டுப் பிடியிலிருந்து பொருளாதார துறையில் விலகி, திராவிட சுதந்திர குடியரசு அமைக்கவே முன்னேற்றக் கழகம் நற்பணி புரிகிறது என்றும், விவசாயஉதவிக்காக மத்திய சர்க்கார் பண உதவி மறுத்து, காஷ்மீர் யுத்தத்திற்காககோடிக்கணக்கான பணத்தைச் செலவிடுவதும், அரசியல் தயாரிப்பதற்கான செலவு, தூதர்களுக்குசெலவு இப்படிப் பாட்டாளிகளின் வரிப்பணத்தை விரையமாக்குவதை விளக்கி வடநாட்டாரிடமிருந்து விலகியே ஆகவேண்டுமென்றும் கூறினார்.

மானாம்பதி

காஞ்சீபுரம், டிச. 4—
காஞ்சீபுரத் திற்கடுத்த மானாம்பதியில், தி. மு. கழகக் கூட்டம், 27-11-49 மாலை 6 மணிக்கு நடைபெற்றது.

தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்கள், தோழர்கள் ஈழபுத்தடிகள், புட்டாசாமி இராஜகோபால், இலட்சுமணன் ஆகியோருடன் வந்து சேர்ந்தார்கள். தோழர் எம். அழகானந்தம் அவர்கள் இல்லத்தில், சிற்றுண்டி உண்ட பிறகு இவ்வூர் பஞ்சாயத்து போர்டு படிப்பகத்தில் தோழர் அண்ணாத்துரைக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்பு 6 மணிக்கு கூட்டம் துவங்கியது. ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். முதலில் "வேலைக்காரி விமர்சனம்" நடைபெற்றது. பிறகு தோழர் அ. பசுபதி அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்து சிறிது நேரம் பேசினார். அடுத்தபடியாக தோழர்கள் காஞ்சீபுரம் இராஜகோபால், மணி ஆகியோர் பேசினார்கள்.

இறுதியாக நீண்ட கைதட்டல்களுக்கிடையே தோழர் அண்ணாத்துரை எழுந்ததும் மலர்மாலை அணிவிக்கப்பட்டன. பின்பு பேச ஆரம்பித்தார். அவர் தி. மு. கழகத் திட்டங்கள் பற்றியும், வடநாட்டு ஆதிக்கச் சுரண்டல் பற்றியும், சமுதாயத்திலிருக்கும் ஊழல்கள் பற்றியும் விளக்கி, சுமார் 1-45 மணி நேரம் அழகாக சொற்பொழிவாற்றினார்.

பிறகு, தோழர் தேவசேனாபதி நன்றி கூற, இரவு 8-15 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது. (வி-உ)

குள்ளப்பக்கவுண்டன் பட்டி

குள்ளப்பக்கவுண்டன்பட்டி, டிச. 7—
4—12—49 ஞாயிறன்று. இவ்வூர் தி. மு. க துவக்க விழா தோழர் எஸ். கிருஷ்ணசாமி தலைமையில் ஆரம்பமாயிற்று. அம்மாபட்டி, உத்தமபாளையம், காமயக்கவுண்டன்பட்டி, நாராயணத் தேவன்பட்டி, சுருளிப்பட்டி கம்பம், கூடலூர் ஆகிய இடங்களிலிருந்தெல்லாம் திரள்திரளாக 2000-க்கு மேற்பட்ட மக்கள் விழாவுக்கு வந்திருந்தனர். பாண்டு வாத்திய ஊர்வலத்திற்குப் பின், கூட்டம் ஆரம்பமாயிற்று. தலைவர் முகவுரைக்குப் பின், கூடலூர் தோழர்கள் வி. பரமன், எம். அழகு கியோரும், இரா. தேவன், எம். ராசு ஆகியோரும் பேசினர்.

தங்கப்பழம்

கடைசியாகத் தூத்துக்குடித் தோழர் இரா. சு தங்கப்பழம். பேசுகையில்,

நாட்டில் உள்ள எந்தக் கட்சியும் செய்யாத, செய்ய விரும்பாத, செய்தாலும் தோல்வியடைந்து போன, பழமையை அகற்றும் பயங்கரமான வேலையில் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம் என்றும், அரசியல், பொருளாதாரம் பற்றிய திட்டங்கள், கொள்கைகள் எங்களுக்கு வேறு இருந்தாலும், மூடநம்பிக்கைகளை முறியடித்து, மக்களை அறிவுப்பாதைக்கு இழுத்துச் செல்வதுதான் எங்கள் முதல் வேலை என்றும், இக்கிராமத்தில், நல்ல பாதை விளக்குவெளிச்சம், கிணறு பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி இதுபோன்ற எந்த வசதியும் இல்லை ஆனால் திரும்பும் திக்கெல்லாம் கடவுள்களின் கல்லறைகள் (கோவில்கள்) காணப்படுகின்றன "எல்லாம் அவன் செயல்" என்ற எண்ணமும், இந்த உலகத்தை மறந்து, வேறு ஒரு உலகத்து வாழ்வை எண்ணிக்கொண்டிருப்பதும் தான் இந்த கீழ்த்தர நிலைக்கு காரணம் என்றும், மனித அறிவு வளர்ச்சியின் சின்னங்களான, ஒலிபெருக்கி, கார், ரயில், விமானம் இதுபோன்ற சாதனங்கள் எப்படி இயங்குகின்றன, யாரால் கண்டுபிடிக்கப்பட்டவை என்றெல்லாம் உங்களுக்குத் தெரியாது தெரிய விரும்புவதும் கிடையாது. ஆனால், 68 ஆயிரம் பெண்டாட்டி தசரதன் கதையையும், 27 பிள்ளைகளைப் பெற்றும் சேம்பேறியாய்த் திரிந்த குசேலன் கதையையும் தெரிந்து வைத்திருப்பீர்கள். இதற்கெல்லாம் பல ஆண்டுகளாகவே பரம்பரை பரம்பரையாக நம்முடைய உள்ளத்திலும், உணர்ச்சியிலும் மூடப்பழக்க வழக்கங்கள் ஊறிப் போனவைகள்தான் என்றும், இன்னும்மூட வழக்கங்களைக் கண்டித்து சுமார் 2 மணி நேரம் உணர்ச்சி ததும்ப பேசினார். கூட்டம் இரவு 10 மணிக்கு இனிது முடிந்தது கூட்டம் வெற்றிகரமாகநடைபெற முழு முயற்சியும், பொறுப்பும் எடுத்துக்கொண்டவர்கள், தோழர்கள், பாண்டியன், ராஜூ, முத்துக்கண் ஆகியவர்களாகும். (வி-உ)

பொட்டல்புதூர்

பொட்டல்புதூர், டிச. 2—
28-11-49 இரவு 8 மணிக்கு பொட்டல்புதூர் தி மு. க சார்பாக எம. எம் அகமது மைதீன் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. அவ்வமயம் தோழர்கள் கே. வி. காதர்மைதீன், என். பி. எம். அப்துல்காதர் கே. வி. கே. சாமி ஆகியோர் பேசினர். தோழர் நாசர் மீரான் நாட்டுப்பண் பாடினார்.

அப்துல்காதர்

பின்னர் தோழர் அப்துல் காதர், இஸ்லாமியர்கள் ஏன் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர வேண்டுமென்றும், எப்படி இஸ்லாம் பகுத்தறிவுக்கு ஒத்ததோ அது போலவே தி. மு. க.வும் பகுத்தறிவுப் பிரச்சாரம் புரிகிறதென்றும், மற்றும் ஆட்சியின் அவலநிலைபற்றியும் பேசினார்.

கே. வி. கே. சாமி

பின்னர் தூத்துக்குடி கே. வி. கே. சாமி அவர்கள் நீண்ட கைதட்டலுக்கிடையே எழுந்து பேசினார்.

"இங்கு இஸ்லாமியர்களே பெரும்பான்மையாகக் கூடியிருக்கிறீர்கள். எங்கள் கூட்டம் போட பள்ளிவாசலில் இடம் கொடுத்திருக்கிறீர்கள். பாராட்டுகிறேன். இதற்கு முன் நடந்த காங்கிரஸ் கூட்டத்தில் ஒரு தோழர் "முஸ்லீம்கள் இந்த நாட்டைவிட்டு பாகிஸ்தானுக்கு பள்ளிவாசலைத் தூக்கிக் கொண்டு போங்கள். நாங்கள் மாலை போட்டு அனுப்பத் தயார்" என்று பேசினாராம். நான் கூறுகிறேன். "நீங்கள் திராவிடர்கள், சரித்திரம் சான்று பகருகிறது. பேசியவர் பார்ப்பனர் ஆகவே தான் அவர் சாதித்திமிரோடு பேசியிருக்கிறார். அது ஒழிய வேண்டுமென்றுதான் நாங்கள் உழைக்கிறோம். அந்தத் திமிர் ஒழியாவிட்டால், ஒரு காலத்தில் அவர் வர்க்கமே விரட்டப்படும் என்றும், இஸ்லாமியர் எங்களோடு ஒத்துழைக்க வேண்டும்" என்று கூறினார். மேலும் அவர் மந்திரிமாரின் சம்பளங்கள்பற்றியும், நெசவுத் தொழிலாளியின் நிலைபற்றியும் விரிவாக 1-30 மணிநேரம் பேசினார். பின்னர் தலைவர் திராவிட முன்னேற்றக் கழகம் நாத்திகக் கழகமல்ல என்று விரிவாகப் பேசினார்.

பின்னர் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது. (வி-உ)

திருவத்திபுரம் 'பொங்கல் விழா "காளைவளர்ப்புப் போட்டி"

வளமான காளைக்குப் பரிசு

திருவத்திபுரம், டிச. 3—
திருவத்திபுரம் தி. மு. கழகத்தினர் கீழ்க்கண்ட அறிவிப்பைப் பொது மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறார்கள்:—

வணக்கம். கடந்த நான்கு ஆண்டுகளாக தைத் திங்கள் 5-ம் நாள் முதல் ஒரு வாரம் வரை திருவத்திபுரத்தில், பொங்கல் விழா நடைபெறுவது அனைவரும் அறிந்ததே.

உழவன் தன் தொழிலில் பெற்ற வெற்றியைக் கொண்டாடுவதே பொங்கல் விழா ஆகும். ஆகவே, அவ் விழாவைக் கொண்டாடுவோர் அவ்வுழவுத் தொழிலை வளர்ப்பதற்கான வழிவகைகளைச் செய்யவும் கடமைப்பட்டவராவர்.

உழவனுக்கு, அவன் தொழிலில் உறுதுணை செய்வது கால்நடைகளேயாகும். ஆகவே, அக் கால்நடை வளர்ச்சியில் கவனம் செலுத்துவதற்காக, நம் தாலுக்காவிலுள்ள வளமான காளை ஒன்றிற்குப் பரிசு அளிக்க எண்ணியுள்ளோம். இதனால், காளைகள் வளர்ச்சியில் உழவர்களுக்கு ஊக்கம் உண்டாகும்; கால் நடைகளை நன்முறையில் வளர்க்கத் தலைப்படுவர்.

நம் தாலுகாவில் உள்ள வளமான காளைகளை, விழாவின்போது [நாள் பின்னர் அறிவிக்கப்படும்.] திருவத்திபுரத்திற்குக் கொண்டுவர வேண்டும். போட்டியில் கலந்து கொள்ள கட்டணம் ஏதும் கிடையாது.

காளைகளைப் பற்றிய பழக்கமுள்ள குழுவினரால், வந்துள்ள காளைகளில் 'சிறந்தது எது?' என்று தேர்ந்தெடுக்கப்படும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட காளைக்குரியவர்க்கு ரூபாய் 25 பரிசாக அளிக்கப்படும்.

நம் தாலுகாவில் உள்ள உழவர்கள் அனைவரும், தங்கள் வளமான காளைகளைக் கொண்டுவந்து "காளை வளர்ப்புப் போட்டியில்" கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

குறிப்பு:—போட்டியில் பொலி எருதுகள் அனுமதிக்கப்படமாட்டா.

"உணவு உற்பத்தியைப் பெருக்கி மக்கள் உற்பத்தியைக் கட்டுப்படுத்துக"

பற்றுக்குறை நிலைதளர பல்லாண்டுகள் பிடிக்கும்

எடின்பரோ சுகாதாரப் பேராசிரியர் கருத்துரை

கொழும்பு, டிச. 8—

உலகிலுள்ள உணவுப் பற்றுக்குறை நீங்கப் பெற எல்லா மக்களுக்கும் வயிறார உணவு கிடைக்க ஒரு நூற்றாண்டுக்கு மேலே பிடிக்கும். ஆகவே உணவு உற்பத்தியைப் பெருக்க முயற்சிப்பதுடன் மக்கள் உற்பத்தியைக் குறைக்கவும் உலகில் முன்வர வேண்டும். இல்லையேல் இப்பிரச்னை என்றுமே தீராப் பிரச்னையாக இருந்துவரும் என்று எடின்பரோ பல்கலைக் கழக சுகாதார பேராசிரியர் டாக்டர் க்ரு ஒரு பேட்டியில் கூறினர்.

இவர் ஆஸ்திரேலியாவிலிருந்து இந்தியாவுக்கு செல்லும் வழியில் இங்கு வந்து தங்கியிருக்கிறார்.

அவர் மேலும் கூறியதாவது:- உதாரணமாக இந்தியாவை எடுத்துக் கொள்ளுங்கள். அந்நாட்டிற்கு எவ்வளவோ முக்கிய பிரச்னைகள் சமாளிக்க வேண்டியிருக்கின்றன. அத்துடன் உணவுப் பிரச்னையையும் சமாளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இதே நிலைமைதான் எல்லா கீழ்த்திசை நாடுகளிலும் இருந்து வருகிறது.

முன் பெல்லாம் 'பிளேக்' முதலிய வியாதிகளால் மக்கள் தொகை அளவுக்கு குறைந்து வந்தது. ஆனால் விஞ்ஞான அறிவு டாக்டர்கள் மூலம் நோய்க்கு இரையாகாமல் தடுக்க வழி செய்யப்பட்டுவிட்டது. ஒரு கதிர் விளையும் பயிர் மூன்று கதிர் விடும்படி செய்ய பல நல்ல முறைகள் பிடிக்கலாம். ஆகவே கிடைக்கும் உணவை எல்லாருக்கும் கிடைக்கும்படி செய்ய மக்கள் உற்பத்தியைக் கட்டுப்படுத்துவது அவசியமாகும்.

இந்தோனேஷ்ய - சிங்கப்பூர் வர்த்தகம்

சிங்கப்பூர், டிச. 8—

இந்தோனேஷியாவுடன் நின்ற மறுபடி வர்த்தகம் மீண்டும் ஆரம்பமாகும் என்று தெரிகிறது. இந்த வர்த்தகம் டச்சு ராணுவ நடவடிக்கை ஆரம்பித்ததுடன் நிறுத்தப்பட்டுவிட்டது. சமதானவுடன் முன்பு நடைபெற்ற அந்த பரிவர்த்தனை இப்பொழுது மட்டும், மாதம் ரூ 200,00,000-க்கு நடைபெறும் தாம்.

ஆண்டு விழா

கோவை சா. பி. தியாகராய படிப்பக முதலாவது ஆண்டு விழா, 11-12-49 ஞாயிறு காலை 9-மணிக்கு கோவை எடிசன் தியேட்டரில் நடைபெறும்.

அதுசமயம் தோழர் க. அன்பழகன் எம். ஏ. அவர்கள் தலைமையில் தோழர்கள் டி. கே. சீனிவாசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சர்க்கரை வாங்க டாக்டர் 'பர்மிட்'!

வியன்னா, டிச. 8—

ஜியார்ஜியாவில் இன்றியமையாத உணவுப் பொருள்கள் ஏராளமாகவில்லையென்றிருக்கின்றன வென்று அங்கிருந்து வந்தவர் கூறுகிறார். அங்கு சர்க்கரை வாங்க வேண்டும் என்றால், டாக்டர் சர்டிபிகேட் பெற வேண்டுமாம். —ரூளோப்

பங்களூருக்கு கார்ப்பொரேஷன்

பங்களூர் நகரம், சிவில் ஸ்டேஷன் என்பதாக இரு வேறு பிரிவுகளாக இதுவரை யிருந்ததை ஒன்றாக இணைத்து பெரும் பங்களூர்-பங்களூர் நகரசபை (கார்ப்பரேஷன்) யாக்கும் திட்டம் உருவாகி விட்டதாகவும் டிச. 8-ந் தேதியன்று மேற்படி நகரசபை துவக்கமாகிறதென்றும் தெரிகிறது. இந்நகர சபை எல்லைக்குள் பங்களூர் நகர முனிசிபாலிடி பகுதி, முனிசிபல் கமிஷன் சிவில் ஸ்டேஷன் பகுதி முதலியவை அடங்குமெனத் தெரிகிறது சிற்சில இராணுவ இருக்கையிடங்கள் மட்டும் இதிலடங்காவெனத் தெரிகிறது.

சர்க்கரை உற்பத்திப் பெருக்கம்

நாட்டில் இப்போதிருந்து வரும் சர்க்கரை நெருக்கடியை பெருத்த அளவுக்கு சமாளிக்கும் வகையில் 1949-50-ல் சர்க்கரை உற்பத்தி 10 சதவிதம் உயருமென்று டெல்லி விவசாய இலாகா வட்டாரங்களில் கருதப்படுகிறது.

ஹாங்காங், டிச. 8—

சியாங்கின் எதிர்ப்புக்கு முன்னுனில் கவர்னராக இருந்தவருமான லூ ஹான் கம்யூனிஸ்டுகள் ஆதரவில் மீண்டும் அம்மாகாணத் தலைவராக வருவார் என்று நிச்சயமாய்த் தெரிகிறது.

நன்றி!

"என்னுடன் பிறந்த ஓரே அண்ணர் திரு அ. ப. அந்தோணி அவர்கள் சென்ற 16-11-49-ல இறந்த சம்பவத்துக்கும், 28-11-49 ல நடைபெற்ற இறுதிச்சடங்குக்கும் அன்போடு நேரில் வந்தும், தந்தி, கடிதங்கள், பத்திரிகைகள் மூலமும் அனுதாபம் கூறி, பரிவோடு ஆதரவளித்த மதிப்புக்குரிய பெரியோர்கள், நண்பர்கள், தலைவர்கள், கலைஞர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர் பாவலர்க்கும் என்கள் குடும்பத்தினர் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தனித் தனியே எழுத இயலாமைக்கு மன்னிப்பார்களாக" என, ஜலகண்டபுரம் தோழர் ப. கண்ணன் எழுதுகிறார்.

இனி நடப்பவை

சென்னை — நேப்பாக்கம் தி. மு. க. கிளையின் உறுப்பினர்கள் கூட்டம், 11-12-49 ஞாயிறு காலை 9 மணிக்கு, வீராசாமி தெரு 2-எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும். எல்லா உறுப்பினர்களும் தவறாது வருமாறு வேண்டப்படுகிறார்கள்.

● ● ●

சென்னை — கோடம்பாக்கம் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 10-12-49 இரவு 7 மணிக்கு புலியூர் வெங்கோஜில் தெரு 8 எண்ணுள்ள தோழர் இளையபெருமாள் அவர்கள் இல்லத்தில் நடைபெறும். செயற்குழுவினரனைவரும் தவறாமல் வருகை தருமாறு வேண்டப்படுகிறார்கள்.

* * *

சென்னை — பெரம்பூர் தி. மு. க. கிளையின் சார்பில், 11-12-49 ஞாயிறு காலை 10-மணிக்கு பெரம்பூர் பக்தர் தோட்டம் புதுத் தெரு, 1-எண்ணுள்ள இல்லத்தில் சொற்பயிற்சி கூட்டம் நடைபெறும். 'விதி' என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றப்படும். இதில் கலந்துகொள்ள விரும்பும் அனைவரும் வருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

* * *

மாயவரம் — இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம் 11—12—49 ஞாயிறு மாலை 6-மணிக்கு கழகக் கட்டிடத்தில் நடைபெறும். அதுபோது புதிய செயற்குழுத் தேர்தல், எதிர்கால வேலைத்திட்டம் வகுத்தல் ஆகியவை நடைபெறும். எல்லா உறுப்பினரும் அழைக்கப்படுகிறார்கள்.

* * *

தஞ்சை — இர்நகர் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளையின் துவக்க விழா 11-12-49 ஞாயிறு மாலை 5 மணிக்கு திலகர் திடலில் நடைபெறும். அதுபோது தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

செய்யூர் — இவ்வூர் தி மு. க. கிளையின் துவக்க விழா, 11-12-49 ஞாயிறு மாலை 6-மணிக்கு இவ்வூர் கடை வீதியில் நடைபெறும் அதுபோது தோழர் எம். சின்னையா அவர்கள் தலைமையில் தோழர் என். வி. நடராசன் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

காந்தியார் படுகொலை வழக்குச் செலவு

காந்தி கொலை வழக்கை நடத்த சர்க்காருக்குப் பிடித்த மொத்த செலவு ரூ. 9,64,358 ஆகுமென்று சர்தார் படேல் மத்திய சட்ட சபையில் 7-ந் தேதியன்று குறிப்பிட்டார். இத்தொகையில் ரூ. 3,86,213 வரை தலைமை பிராஸிகியூஷன் வக்கீல் தோழர் சி. கே. தப்தாரிக்குக் கொடுக்கப்பட்டதென்று அவர் மேலும் தகவல் தந்தார்.

ஷெனாய் நகர் கடன் திட்டம்!

அரசியலார் கைவிரிப்பு

ஷெனாய் நகர் வீடு கட்டும் திட்டம் சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய சில காரியங்களுக்காக சென்னை சர்க்காரை சென்னை நகராண்மைக் கழகத்தார் 10 லட்ச ரூபாய் கடன் கேட்டிருந்தனர். இதனை இவ்வாண்டில் தர இயலாதென்றும், அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டம் தீட்டும் போது இது பற்றி ஆலோசிக்கப்படுமென்றும் சென்னை சர்க்கார் அறிவித்துவிட்டனர்.

போகிற போக்கில்...!

"பாக் புனிதப் போரின் சமயம் வெளுக்கிறது."

—செய்தித்தலைப்பு

வெளுத்து விட்டால் இன்னும் 'புனிதமாகி' விடுகிறது! புனிதத்துக்குக் குறி வெண்மைதானே!

● ● ●

"ஹைதராபாத்தில் கம்யூனிஸ்டு வாலை அறுத்துவிட்டோம்"

—சர்தார்பட்டேல்

தலையில்லாமாலே வால்கள் ஆடுமென்று கேட்டிருக்கிறோம். அப்படியிருக்க, வாலை அறுத்துவிட்டால் தலையாடுவதுதானா கஷ்டம்! எனவே சர்தார் இதில் ஏமாந்தேவிட்டார்!

● ● ●

"சென்னை குதிரைப் பந்தய சூதாட்ட தடை சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதை, 1951—ஏப்ரல்வரை ஒத்திவைப்பதென்ற சட்டசபை காங்கிரஸ் கட்சி கூட்டத்தின் முடிவை சென்னை மந்திரிசபை அங்கீகரித்துவிட்டது"

—செய்தி

சர்க்கார் பஸ் போக்குவரத்து மந்திரி தோழர் கோபால் ரெட்டி, இரண்டு கைகளையும் தூக்கி தனது ஆதரவைப் பொழிந்திருப்பார்!

* * *

"பரஸ்பர பயமே வகுப்புத் துவேஷத்திற்குக் காரணம்"

—கவர்னர் பவகர்

பரஸ்பர பயத்துக்கு யாது காரணமோ?

* * *

"ஸ்ரீரங்கத்தில் குரங்குகள் உபத்திரவம்"

—செய்தித் தலைப்பு

பள்ளிகொண்டிருக்கும் பெருமானைத் துயிலெழுப்ப முயல்கின்றனவோ!

* * *

ஐ. நா. அசெம்பிளியில் பாக. குட்டை குழப்பல்: இந்தியா ஆட்சேபம்.

—செய்தித் தலைப்பு

ஆட்சேபிப்பானேன்? குழம்பிய குட்டை தெளிந்ததும், நாம் இறங்கிக் குழப்பிவிடால் போகிறது!

"காங்கிரஸ்காரர்கள் பேரசையை விடவேண்டும்"

—ராஷ்டிரபதி பட்டாபி

எவ்வளவு பெரிய பேராசை காங்கிரஸ்காரர்களா, ராஷ்டிரபதிக்கு!

* * *

ரஷியாமீதுள்ள சீன புகாரை 'ஊறுகாய் போட' ஐ நா சபை முடிவு"

—செய்தித் தலைப்பு

புகார் 'புளிப்பாய்' இருந்ததுதான் காரணமாயிருக்குமோ!

* * *

"இரு உலக யுத்தங்களில் சேவை செய்த ஸ்திரீ: மூன்றாவது யுத்தம் ஏற்பட்டால் சேவை செய்ய ஆசை"

—செய்தித் தலைப்பு

இவருக்காகவாவது ஒரு யுத்தம் சீக்கிரம் வந்தால் நல்லதென்று கருதுகின்றனர், சேவையைப் பயன்படுத்திக் கொள்ளவிரும்பும் சமாதானப் பிரியர்கள்!

* * *

'செவ்வாய்க் கிரகத்தையும் பிடிக்கிறது ரஷ்யா'

—செய்தித் தலைப்பு

'தோஷம்' வந்து பற்றிக் கொள்ளுமோவெனப் பயப்படுகிறார். பாரத இந்தியாவெற்றெடுத்த பூணூல்போட்ட கம்யூனிஸ்ட்!

* * *

"காங்கிரஸ் மந்திரிகளின் ரப்பர் ஸ்டாம்பு போல் இருப்பது காங்கிரஸ் ஸ்தாபனத்தின் வேலையல்ல"

—பட்டாபி சீத்தாராமய்யா.

'பேப்பர் வெயிட்' போல் பயன் படுவதாய் இருக்கலாமோ!

* * *

"சென்னை மந்திரிகள் சிலர் மீதுள்ள புகார்கள் பற்றிய காரியக்கமிட்டி விசாரணை முடிவடைந்து விட்டதாகக் கருத முடியாது"

—காங்கிரஸ் காரியதரிசி கானா.

சீக்கிரம் முடித்திருந்தால், 'சென்னை சர்க்காரின் மூன்றாண்டு சாதனை' என்ற நூலில் சேர்த்திருக்கலாமல்லவா!

பெங்களூர் மாவட்ட தோழர்களுக்கு

என்னிடம் திராவிட முன்னேற்றக் கழக தலைமை அலுவலகத்திலிருந்து உறுப்பினர் சேர்க்கும் ரசீது புத்தகம் வந்திருக்கிறது. கிளைக்கழகச் செயலாளர்கள் நேரில் வந்து ரசீது புத்தகம் பெற்றுக் கொள்ளவும். அதோடு, தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களும், பிரச்சார குழுவினர்களும் பெங்களூர் மாவட்டத்திற்கு சுற்றுப் பிரயாணம் துவங்குவதற்குள் கிளைக்கழகங்கள் அமைக்காத ஒவ்வொரு ஊரிலும் கிளைக்கழகங்கள் அமைத்து பெருவாரியாக உறுப்பினர்களைச் சேர்த்து நமது மாவட்டத்தைச் சிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

பெ. ம. அப்பாதுரை.
அமைப்பாளர்
(பெங்களூர் மாவட்டம்)
பெரியார் இராமசாமி நகர்.
பெங்களூர்.

சந்தா விவரம்

(உள் நாடு)

ஒரு மாத சந்தா	ரூ. 2—0—0
மூன்று மாத சந்தா	ரூ. 6—0—0
ஆறு மாத சந்தா	ரூ. 12—0—0
ஒரு வருட சந்தா	ரூ. 24—0—0

மூன்று மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
வி. பி. மூலம் அனுப்ப இயலாது.

(வெளி நாடு)

மலேயா, பர்மா முதலிய இடங்களுக்கு:—

ஒரு மாத சந்தா	ரூ. 3—0—0
மூன்று மாத சந்தா	ரூ. 9—0—0
ஆறு மாத சந்தா	ரூ. 18—0—0
ஒரு வருட சந்தா	ரூ. 36—0—0

மூன்று மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வி.பி: மூலம் அனுப்ப இயலாது.

மானேஜர், "மாலை மணி"

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

10—12—49

சக்காமல்லூர் :— சி. பி. சிற்றரசு

11—12—49

செய்யூர் :— என். வி. நடராசன், எம். சின்னையா.

தஞ்சாவூர் :— இரா. நெடுஞ்செழியன்.

கோவை :— க. அன்பழகன், டி. கே. சீனிவாசன், ஏ.வி.பி. ஆசைத்தம்பி.

ஆந்திர மாகாணம்

பிரிவினைக் கவுன்சில் நியமனம்

சென்னை மந்திரி சபையின் கூட்டமொன்று டிச. 7-ந் தேதியன்று பிரதமர் குமாரசாமி ராஜா தலைமையில் நடைபெற்றது. ஆந்திர மாகாணம் நிறுவனம் சம்பந்தமான பிரிவினைக் கவுன்சில் ஒன்று மேற்படி கூட்டத்தில் வகுக்கப்பட்டது.

அக்கவுன்சிலின் உறுப்பினர்கள் விவரமாவது: பிரதமர் (தலைவர்) தோழர்கள் எம். பக்தவத்சலம், கே. மாதவமேனன், டி. டி. கிருஷ்ணமாச்சாரி, பி. கோபால்ரெட்டி, என். சஞ்சீவி ரெட்டி, ட. பிரகாசம், கான வெங்கட்ராவ் ஆகியோர்.

புதிய மாகாணமொன்று நிறுவப் பெறுவதற்கு முன்பு, இந்திய சர்க்கார் இதற்கு அனுப்பிவைத்திருக்கும் தகவலில் எழுப்பியுள்ள அம்சங்களையெல்லாம் விவாதித்து ஆலோசித்து முடிவுகட்டுமாறு மேற்படி கவுன்சில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சீனக் கம்யூனிஸ்டு சர்க்காருக்கு பர்மா அங்கீகாரம்

கிறிஸ்துமஸுக்கு முன்னதாக, கம்யூனிஸ்ட் சீனாவுக்கு பர்மா அங்கீகாரம் வழங்கிவிடும் போவது பெரும்பாலும் உறுதியே யென்று அடல்காட்டு மந்திரி யு. இ. பெலங்கனிக டிச. 6-ந்தேதி யன்று குறிப்பிட்டார்.

சீனக்கம்யூனிஸ்ட் சர்க்காரிடமிருந்து பர்மாவுக்கு 'எச்சரிக்கைக் குறிப்பு' எதுவும் வரவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

'சுதந்திர நாள்மட்டுமே தேசியத் திருநாள்'

சுதந்திர நாள் ஒன்றினை மட்டுமே தேசியத் திருநாளாகக் கொண்டாட இந்திய சர்க்கார் திட்டமிட்டிருப்பதாக, சர்தார் வல்லபாய் பட்டேல் மத்திய சட்டசபையில் டிசம்பர் 7-ந் தேதி குறிப்பிட்டார்.

நேரு சர்க்காரின் விளம்பரக் கட்டணம்

காமன்வெல்த் நாடுகளிலுள்ள தங்களுடைய அரசுப் பிரதிநிதிகளுக்கென இந்திய அரசியலார் 1948—49-ல் செலவிட்ட தொகை 1,75,00,000 என்று டாக்டர் பி. வி. கேஸ்கார் மத்திய சட்டசபையில் தெரிவித்தார்!

ஆசிரியருக்கு முடங்கல்

தமிழுக்கு முதலிடம் இல்லையா?

ஐயா,

சர். மு. சித. முத்தையா செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் 28-10-49-ந் தேதி மாணவர் பார்லிமெண்டு கூட்டம் நடந்தது. மேற்படி கூட்டத்தில், மாகாண மொழியாகிய தமிழ் மொழியிலேயே கடவுள் வாழ்த்து முதலில் பாட வேண்டும். பிறகுதான் தெலுங்கு முதலிய மொழிகளில் பாட வேண்டும் என்று மாணவர்கள் ஒருமித்துத் தீர்மானம் செய்தனர்கள். இதுவரை வடமொழியில் முதலிலும், இரண்டாவதாகத் தெலுங்கிலும், மூன்றாவதாகத் தமிழிலும் கடவுள் வாழ்த்து தலைமை ஆசிரியர் உத்தரவுப்படி நடந்து வந்தது. தமிழரின் தலைநகராகிய சென்னையில், நல்ல தமிழரால் நடத்தப்படும் பள்ளியில் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக்கொண்ட தலைமை ஆசிரியரின் கீழ் 100-க்கு 90 மாணவர்கள் தமிழ் மாணவர்களாயிருந்தும், இவ்வாறு நடைபெறுவதைக் கண்டு மனம் புழுங்கிய இத்தகைய பெரும் தீர்மானத்தை இயற்ற நேர்ந்தது. இத்தீர்மானத்தின் (மாணவர்கள் பார்லிமெண்டு) முடிவை அசட்டை செய்து புறக்கணிக்க ஒரு சிலர் முயற்சி செய்கின்றனர். ஆதலால் சீர்வாசிகளும், தலைமை ஆசிரியர் அவர்களும் மாணவர் ஆட்சி மன்றத்தின் முடிவுப்படி நேர்மையான முறையில் தாய்மொழியாகிய தமிழ்மொழிக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

7-12-'49 } இங்ஙனம்,
சென்னை } புரசைவாசி

வெளிவருகிறது!

1—1—1950 முதல்

'தமிழ்நாடு'

திராவிடர் திங்கள் வெளியீடு

தனிப் பிரதி அணா 2.
வருட சந்தா ரூ. 1-8-0

—: விவரங்களுக்கு :—

தமிழ்நாடு பதிப்பகம்,
மண்ணடி :: சென்னை-1.

கள்ளோ? காவியமோ?
டாக்டர் மு. வரதராசன் அவர்களின்
மிகச் சிறந்த நாவல்
இரண்டாம் பதிப்பு
விலை ரூ. 3—0—0
பாரி நிலையம்,
59, பிராட்வே, சென்னை-1.

திருவத்திபுரம் பொங்கல் விழா

வட ஆற்காடு மாவட்டம், திருவத்திபுரத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் "பொங்கல் விழா" இவ்வாண்டும் மிகச் சிறிய முறையிலே நடைபெற ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

சொற்பொழிவுகள், கலைக்காட்சிகள், கட்டுரைப் பரிசுப் போட்டி, காளை வளர்ப்புப் போட்டி, இசை, நாடகம் முதலிய அம்சங்களுடன் நடக்க இருக்கின்றன.

பெரியார் திரு. வி. க., புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், தோழர்கள் அண்ணாத்துரை, இரா. நெடுஞ்செழியன், க. அன்பழகன், ஈ. வி. கே. சம்பத், தோழியர் சத்தியவாணிமுத்து, ஔவை துரைசாமி ஆகியோர் இதுவரை ஒப்புதல் அளித்துள்ளனர்.

1950 ஜனவரி 18-ந் நாள் தொடங்கி 26—1—50 வரை நடைபெறும் விவரமான அறிக்கை பின்னர் வரும்.

தி. மு. கழகத்தினர்,
திருவத்திபுரம் - வ. ஆ.

இந்திய கணித மாநாடு

சென்னை, டிச. 8—

இந்திய கணித 16-வது மாநாட்டை செனட் ஹவுஸில், டிசம்பர் 26-ந் தேதி காலை 10-30-மணிக்கு சர். சி. வி. ராமன் திறந்து வைப்பார். இம்மாநாடு சென்னைப் பல்கலைக் கழக அழைப்பின்பேரில் செயலாக்கத்தில் 3 நாட்கள் நடைபெறுகிறது. முதல் நாள் காலை 10-30 மணிக்கு கணித சம்பந்தமாயும், விஞ்ஞான சம்பந்தமாயுள்ள ஒரு பொருட்காட்சி சாலையை சர். சி. பி. ராமசாமி அய்யர் திறந்து வைப்பார். மாநாட்டிற்கு அமெரிக்க கணித சங்கத்துத் தலைவர் தோழர் எம். எச். ஸ்டோன், ஸ்விட்டன் தேசத்து புள்ளி விவரம் தயாரிக்கும் வல்லுநர் போரிரியர் ஹெரால்ட் முதலியவர்கள் பிரதிநிதிகளாய் வருவார்கள்.

கணக்கு எப்படி கற்பிப்பது என்பதைப் பற்றி மாநாட்டில் சொற்பொழிவு நடைபெறும். பிரதிநிதிகளுக்கு உல்லாசப் பிரயாணமும் பொழுதுபோக்குக்கு வேண்டிய கச்சேரி முதலியவைகளும் மாநாட்டில் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கணித சங்கம் 1907-ஆண்டில் நிறுவப்பட்டது. இச்சங்கம் உலகத்திலே மிகப் பழமையானது. முப்பத்திரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இம்மாநாடு சென்னையிலே மீண்டும் நடைபெறுகிறது.

இந்தியாவுக்கு யு. எஸ். உதவி

இந்தியா, ஆப்கனிஸ்தான், பர்மா, பாகிஸ்தான், சிரியா ஆகிய நாடுகளுக்குப் பல்வேறு விஞ்ஞான, தொழில் துறை இடங்களில் உதவியளிக்கும் வகையில் யு. எஸ். விஞ்ஞான, கலைத்துறைக் கமிட்டி 74,335 டாலர் 'கிராண்ட்' ஒதுக்கியுள்ளது.

சீனக் கம்யூனிஸ்டுகள் எதிர்காலத் திட்டம்

லண்டன், டிச. 8—

"இன்னும் சில வாரங்களிலோ அல்லது மாதங்களிலோ சீன கம்யூனிஸ்டுகள் பர்மா, இந்தோசீனா எல்லைகளை சமீபத்து விடலாம். சிறிது காலத்தில் அவர்கள் தங்கள் ஆதிக்கத்தைப் பரப்புவதன் மூலம் இந்திய எல்லையையும் சமீபித்து விடலாம்" என்று 'டெய்லி ஹெரால்டி'ல் தோழர் எ. டி. ஸ்டீல் என்பவர் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் எழுதியிருப்பதாவது:- ஆசியாவில் கம்யூனிஸ்டுகள் எவ்வளவு தூரம் தங்கள் ஆதிக்கத்தைப் பரப்புவார்கள் என்பதுபற்றி, திட்டமாக சொல்வதற்கில்லை. மேற்கு வல்லரசுகளும் அவர்களுடைய அனுதாபகளும் இந்த ஆபத்தை சமாளிக்க எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை பொறுத்த விஷயமாகும் இது. சீனக் கம்யூனிஸ்டுகளுக்கும் சமாளிக்க வேண்டிய பிரச்சினைகள் எவ்வளவோ இருக்கின்றன. அவர்கள் எதிர்பார்த்ததிற்கு அதிகமாகவே அரசியல் பொருளாதார சிக்கல்கள் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன. -ருளோப்

கிழக்கு ஐரோப்பாவிலிருந்து மக்கள் வெளியேற்றம்

லண்டன், டிச. 8—

கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிஸ்டு ஆதிக்கமுள்ள நாடுகளிலிருந்து இதுவரை 80 கோடி மக்கள் வெளியேறியிருப்பதாகவும் நாளொன்றுக்கு 800பேர் மேற்கு ஜெர்மனிக்கு வந்தவண்ணமிருக்கின்றனர் என்றும் தெரிகிறது. இவர்களுக்கு வசதி தேடித்தருவதே பெரும் பிரச்னையாக இருக்கிறது என்று, பிரிட்டிஷ் கண்ட்ரோல் கமிஷன் கூறியிருக்கிறது. —ருளோப்

புதிய கரன்ஸி நோட்டுகள்

மன்னர் தலை பொறிக்கப் பெற்றிருக்கும் இடத்தில், அசோகர் தூண் பொறிக்கப்பட்ட புதிய கரன்ஸி நோட்டுகள், 1950 ஜனவரி 26 முதல், செலாவணிக்கு வருமெனத் தெரிகிறது. பிரிட்டனிலிருந்து 'வாட்டர்—மார்க்' தாள் கிடைப்பதில் தாமதமானதே இந்நோட்டுகள் இவ்வளவு காலம் கடந்து வருவதற்குக் காரணமென மந்திரி மத்தாய் அறிவித்தார்.

நீதி-நிர்வாக இலாகா பிரிவினை

நீதி-நிர்வாக இலாகாக்கள் பிரிவினை சம்பந்தமான மந்திரிசபை உபகமிட்டியின் அறிக்கையை, சென்னை மந்திரிசபை ஏற்றுக்கொண்டுவிட்டது. மாகாணத்தில் பேலும் மாவட்டங்களில் இப்பிரிவினை முறையை நிறைவேற்றவேண்டுமென சிபார்சு செய்யப்பெற்றிருந்தது.

புள்ளிவிவர சேகரிப்பு இலாகா

பாட்னா, டிச. 8—

எல்லா இலாகா வேலைகளையும் ஒன்றுசேர்த்து சம்பந்தப்படுத்துவதற்கு பொருளாதார புள்ளிவிவரத் தயாரிப்பு இலாகா ஒன்று பீஹாரில் புது ஆண்டில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. (ருளோப்)

வானொலி

(10-12-49 சனிக்கிழமை)

சென்னை

[211.3 மீட்டர்கள்]

காலை :

7-15 தமிழில் செய்திகள்
7-30 மங்களம் ராமமூர்த்தி—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ. த.)

பிற்பகல் :

1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
2-00 தமிழில் செய்திகள்
2-15 சிறுவர் நிகழ்ச்சி

மாலை :

4-00 குழந்தைகளுக்கு (ஆங்கிலம்)
5-30 ஜெ. லீலா—வீணை
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-20 கே. ஆர். லட்சுமி—பாட்டு

இரவு :

7-15 தமிழில் செய்திகள்
7-30 சினிமாப் பாட்டுகள்
7-45 இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர்—பாட்டு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 டாக்டர் ஏ. ஜெ. பாய்டு (ஆங்கிலப் பேச்சு)
9-30 தறையூர் இராஜகோபால சர்மா (இசைத்தட்டு)
10-30 முடிவு.

திருச்சி

[395.8 மீட்டர்கள்]

காலை :

7-15 தமிழில் செய்திகள்
7-30 என். வி. ஜானகிராம பாகவதர்—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 மதுரை ஜெ. ராமையா—வயலின்
8-30 காலை இசை (இசைத்தட்டு)

பிற்பகல் :

1-00 மதுரை ஜெ. ராமையா—வயலின்
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 பல்கலைக் கழகங்களுக்கு
2-00 தமிழில் செய்திகள்
2-10 பல்கலைக் கழகங்களுக்கு (காலேஜ் நியூஸ்)

மாலை :

5-00 என். வி. ஜானகிராம பாகவதர்—பாட்டு
5-40 திருல்பா, புல்லாங்குழல்
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 கிராமானம் (இ. த.)
6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு :

7-15 தமிழில் செய்திகள்
7-30 வி. நாடிமுத்துப்பிள்ளை—பேச்சு
7-45 சென்னையிலுள்ளபடி
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 வீணை, கோட்டு வாத்தியம்
9-35 இசைவேளை (இ. த.)
10-00 முடிவு.

மத்திய கிழக்கு பாதுகாப்புத் திட்டம்

டமாஸ்கஸ், டிச. 8—

[illegible]

Printed & Published by T. M. Parthasarathy at the Meyoenville Press, 2/43, Muthumari Chetty Street, Madras-1.